1975 நவம்பர் 4]

சென்னை-சத்தியவேடு பேருந்து வழித்தடம்

* 179 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து சத்தியவேடு செல்லும் வழித்தடம் எண் 112-ஏ பேருந்துகள் இப்பொழுது கண்ணன்கோட்டை கிராமம் வரை சென்று வருவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், வழக்கம்போல் அவை கண்ணன்கோட்டை செல்ல எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் :

(அ) மற்றும் (இ) சென்னையிலிருந்து சத்தியவேடு செல்லும் பேருந்துகளில் ஒன்று (எண் 112-ஏ) 1—4—1975 முதல் கண்ணன் கோட்டைக்குச் சென்று வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : அந்தக் கிராமத்திற்குச் செல்ல இந்த ஒரு பேருந்தைத் தவிர வேறு பேருந்து இல்லை. இந்தப் பேருந்து செல்லுவது அடிக்கடி தடைப்படுகிறது என்ற புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. தொடர்ந்து எல்லாத் தடவையும் பேருந்து சென்று வர உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சத்தியவேடு வழித்தடத்தில் ஒரு நாளைக்கு 10 தடவை பேருந்து சென்று கொண்டிருக்கிறது. கண்ணன் கோட்டைக்கு மூன்று தடவை—காலை 5½ மணி, 12 மணி, மாலை 5 மணி ஆகிய மூன்று தடவை போய்க் கொண்டிருக்கிறது. இதற்கு முன்னல் கண்ணன் கோட்டைக்குப் பேருந்து போகாத தற்குக் காரணம் அந்த ரோடு சரியாக இல்லாமல் இருந்தது. இப் போது அந்தச் சாலை சரி செய்யப்பட்டு மூன்று தடவை கண்ணன் கோட்டைக்குப் பேருந்து சென்று கொண்டிருக்கிறது ; போக்கு வரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

Assistance for fisheries development.

* 180 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) whether any financial assistance has been sought for from the Agricultural Refinance Corporation for fishery development projects in the State; and

(b) if so, the details thereof?